**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.276/2021**

**பி.வா.சா. –1– ராஜம்மாள்**

**நாள். 07.01.2025**

**பி.வா.சா.1 இன்று ஆஜராகி வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது சொந்த பூர்வீக ஊர் செட்டியபட்டி என்றால் சரிதான். எனது கணவர் ஊர் சின்னாளபட்டி. எனக்கு பூர்வீக சொத்துக்கள் எதுவும் இல்லை. அதே போல் என் கணவருக்கும் பூர்வீக சொத்துக்கள் இல்லை. 2012 ஆம் ஆண்டு திண்டுக்கல் செட்டியார் வகையறாவிடமிருந்து ஏ 2 1/2 விவசாய நிலம் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். அந்த நிலம் காடு ஆகும். அந்த நிலத்தில் 2 போர்வெல் போட்டோம் என்றால் சரிதான். அதன் பின் அந்த நிலத்தில் மின் இணைப்பு பெற்றோம் என்றால் சரிதான். அந்த நிலத்தில் கொய்யா, எலுமிச்சை போன்றவைகள் விவசாயம் செய்தோம் என்றால் இல்லை. எனக்கு படிக்க தெரியாது. மேற்படி நிலத்தில் விவசாயம் செய்ததற்கான வி.ஏ.ஓ விடம் அடங்கல் பெற்றோம் என்றால் சரிதான். எனது ஊர் செட்டியபட்டியில் 3 வீடுகள் கட்டியுள்ளீர்களா என்றால் 2 வீடு கட்டியுள்ளோம். என் மகன்கள் தகரம் அமைத்து அந்த வீட்டில் தனித்தனியாக உள்ளனர். எனது ஊரை சேர்ந்து தனிக்கொடி மனைவி சந்தனம் அம்மாள் என்பவரை எனக்கு தெரியும். தாவா வழக்கை தாக்கல் செய்ய தகவல் அனைத்தும் நான் கூறினேன் என்றால் சரிதான். மேற்படி எதிர்வாதத்தில் மேற்படி சந்தனம்மாளிடம் கொடுக்கல் வாங்கல் உள்ளது பற்றி சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். மேற்படி கொடுக்கல் வாங்கலுக்கான வெத்து புரோநோட்டில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த எதிர்வாதத்தில் புரோநோட்டில் கையொப்பம் செய்தேன் என்று கூறியுள்ளேன் என்றால் தாவா புரோநோட்டில் நான் கையொப்பம் செய்யவில்லை. ஜாமீனாக சொத்து பத்திரம் கொடுத்து கிரைய ஒப்பந்தம் பதிந்து கொடுத்துள்ளேன் என்றால் பாதுகாப்புக்காக பத்திரம் பதிந்து கொடுத்தேன். எனக்கு 2 மகன்கள், 1 மகள் உள்ளனர். எனது மக்களுக்கு கடன் வாங்கி தான் திருமணம் செய்து வைத்து சொத்துக்களை வாங்கினேன் என்றால் இல்லை, சொந்தமாக சம்பாதித்து வாங்கினேன். நானும் கடன் கொடுத்த சந்தனம்மாளும் ஒரே ஊரில் உள்ளதால் மேற்படி புரோநோட்டில் கையொப்பம் செய்து கடன் பெற்றேன் என்றால் சரியல்ல. நான் எனது கணவரும் தேசிய நெடுஞ்சாலையின் ஓரத்தில் திராட்சை மற்றும் பழம் வியாபரம் செய்தோம் என்றால் இல்லை. தாவா எதிருரையில் கடந்த 5 வருடமாக தனித்து வசித்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது பிரமான வாக்குமூலத்தில் 9 வருடமாக தனியாக வசித்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி காலகட்டத்தில் விவசாயம் எதுவும்

செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எனது எதிர்வழக்குரையில் சந்தனம்மாள் என்பவரிடமிருந்து கடன் பெற்றிருந்து கடனை திருப்பி செலுத்திய பின்பு மேற்படி கடனை பெற்றதற்கான புரோநோட்டை திரும்பப்பெற்றேனா என்றால் நான் புரோநோட்டை எழுதிக்கொடுக்கவில்லை. வாதி மேற்படி சந்தனம்மாளின் சம்பந்தி என்றால் எனக்கு தெரியாது. வாதியிடமிருந்து கடன் பெற்று எழுதாத புரோநோட்டில் கையொப்பம்மிட்டு கொடுத்ததாக எதிர் வழக்குரையில் சொல்லிவிட்டு தற்போது வழக்கிற்காக அதனை மறைத்து புரோநோட்டு எழுதிக்கொடுக்கவில்லை என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா புரோநோட்டில் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை என்பதை நிருபிக்க சட்டப்படியான நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. செங்கட்டாம்பட்டி கிராமம், சுந்தராஜபுரத்தில் கந்தசாமி மகன் ராமசாமியை எனக்கு தெரியாது. செட்டிய பட்டியில் உள்ள சடையாண்டி என்பவரை எனக்கு தெரியும். அவர் சந்தனம்மாள் தோட்டத்தின் அருகில் உள்ள தோட்டத்துக்காரர் ஆவார். செட்டியபட்டியில் பழனிச்சாமி மகன் சுப்பிரமணி என்பவரை எனக்கு தெரியாது. மேற்படி இருவரையும் சாட்சி சொல்ல வந்த போது தான் எனக்கு தெரியும். சாட்சியிடம் தாவா புரோநோட்டு காண்பிக்கப்பட்டு அதில் உள்ள கையொப்பம் கேட்ட போது அந்த கையொப்பம் எனது கையொப்பம் இல்லை என்று கூறினார். எனக்கு பூர்வீகமாக சொத்துக்கள் இல்லை என்றும், கடன் வாங்கி தான் சொத்துக்களும் வாங்கினேன் என்றாலும் , என் மகன் மற்றும் மகளுக்கு திருமணம் செய்து வைத்தேன் என்றாலும் வாங்கிய கடனை திருப்பி தராமல் மோசம் செய்வேண்டும் என்பதற்காக பொய்யாக சொல்லிகிறேன் என்றால் சரியல்ல. செட்டியபட்டியில் உள்ள ராமேஷ்வரி என்பவரை எனக்கு தெரியும் அவரிடம் நான் ரூ.2,00,000/- கடன் பெற்றேனா என்றால் இல்லை. தாவா அனுமதிக்கப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

G SARAN Digitally signed by G SARAN Date: 2025.01.08 16:03:31 +0530

Additional District Judge(FAC),

Dindigul.